“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

# தமிழ்மொழி ஆண்டு 8

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. தமிழிலுள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை
   1. பன்னிரண்டு
   2. பதினெட்டு
   3. முப்பது

2. புரட்டாதித் திங்களில் நடைபெறும் விழா
   1. தீபாவளி
   2. நவராத்திரி
   3. விளக்கீடு

3. பாரதிதாசனின் இயற்பெயர்
   1. கனக சுப்புரத்தினம்
   2. மயிலை சீனிவாசன்
   3. நாமக்கல் இராமலிங்கம்

4. குமணவள்ளலின் ஈகையை எல்லோரும் பாராட்டினர். இதில் ஈகை என்பதன் பொருள்
   1. புகழ்
   2. கொடை
   3. வெற்றி

5. இடையனுக்கு இடைச்சி போல கூத்தனுக்கு
   1. கூத்தள்
   2. கூத்தினி
   3. கூத்தி

6. கற்றவர்களுடனான நட்பு என்றும் இன்பம் தரும். நட்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. ஒற்றுமை
   2. துன்பம்
   3. பகை

7. உங்கள் வாழ்வில் இன்பம் மலர்க. இவ்வாக்கியம்
   1. ஏவல்வாக்கியம்
   2. மெய்ப்பாட்டுவாக்கியம்
   3. வியங்கோள்வாக்கியம்

8. சோலை, பொழில் என்பவற்றைக் குறிக்கும் ஒருசொல்
   1. கழனி
   2. பூங்கா
   3. தோப்பு

9. தலகணி என்பதன் எழுத்துவடிவம்
   1. தலைகணி
   2. தலயணை
   3. தலையணை

10. தென்னைக்குப் பிள்ளை போல வாழைக்கு
    1. கன்று
    2. வடலி
    3. குட்டி

1 2 3

11. பண்டாரவன்னியனின் படைத்தளபதியாக விளங்கியவர்
    1. கதிர்காமர்
    2. குலசேகரமுதலியார்
    3. கப்டன் வொன்றிபேக்

12. தமிழ்மொழித் தேர்வில் சித்தியடைந்தோம். இதன் எழுவாய்
    1. நான்
    2. நாங்கள்
    3. அவர்கள்

13. விருந்தினரை அகமும்முகமும் மலர வரவேற்றனர். இதில் அகமும்முகமும்
    1. இணைமொழி
    2. இரட்டைமொழி
    3. அடுக்குமொழி

14. நெய்தல் நிலத்துக்குரிய உரிப்பொருள் இரங்குதல். இரங்குதல் என்பது
    1. மகிழ்தல்
    2. இருத்தல்
    3. வருந்துதல்

15. பெயரையோ வினையையோ சார்ந்துவந்து பொருள் உணர்த்தும் சொல்
    1. இயற்சொல்
    2. உரிச்சொல்
    3. இடைச்சொல்

16. ஒருவருக்கு ஏற்பட்ட பொருள் அழிவுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு
    1. சன்மானம்
    2. இழப்பீடு
    3. அன்பளிப்பு

17. பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பிறப்பிடமாக விளங்கும் நாடு
    1. ஜேர்மனி
    2. பிரான்ஸ்
    3. சுவிற்சர்லாந்து

18. வண்டமிழ் வளர்த்த மன்னர்களை ஔவையார் போற்றினார். இதில் போற்றுதல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. புகழ்தல்
    2. தூற்றுதல்
    3. வெறுத்தல்

19. நாகரிகச் சூழலால் வாய்மொழி இலக்கியம் அதன் தொன்மை வடிவத்தைப் பெரும்பாலும் இழந்துவிடுகிறது. இதில் தொன்மை என்பதன் பொருள்
    1. புதுமை
    2. பழைமை
    3. செம்மை

1 2 3

20. கல்விக்கு அழகு கசடறமொழிதல். இதில் வந்துள்ள உருபு
   1. இரண்டாம்வேற்றுமை
   2. மூன்றாம்வேற்றுமை
   3. நான்காம்வேற்றுமை

21. குறிஞ்சி நிலத்துக்குரிய மக்கள்
   1. ஆயர்
   2. உழவர்
   3. குறவர்

22. நளவெண்பா பாடிய புலவர்
   1. புகழேந்தியார்
   2. சீத்தலைச்சாத்தனார்
   3. நச்சினார்க்கினியர்

23. ஆசிரியர் கூறிய நல்ல அறிவுரைகளை மாணவர் செவிமடுத்தனர். இதில் வந்துள்ள அடைமொழி
   1. அறிவுரை
   2. ஆசிரியர்
   3. நல்ல

24. 'மையறு மலரின் நீங்கி...' இப்பாடல் இடம்பெற்ற காவியம்
   1. மகாபாரதம்
   2. இராமாயணம்
   3. சிலப்பதிகாரம்

25. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன
   1. ஐம்பொறி
   2. ஐம்புலன்
   3. ஐம்பூதம்

(25×1=25 புள்ளி)

**2. சேர்த்தெழுதுக.**

1. மலை + தொடர் = ______________________
2. குடி + உரிமை = ______________________
3. பட்டு + ஆடை = ______________________
4. தூண்டில் + புழு = ______________________
5. காவல் + அரண் = ______________________
6. வெண்மை + கலம் = ______________________

(6×1=6 புள்ளி)

**3. பிரித்தெழுதுக.**

1. பருவகாலம் = ______________ + ______________
2. நானூறு = ______________ + ______________
3. கூண்டுக்கிளி = ______________ + ______________
4. பகற்பொழுது = ______________ + ______________
5. செங்கண் = ______________ + ______________
6. பண்ணிசை = ______________ + ______________

(6×1=6 புள்ளி)

**4. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சுவிற்சர்லாந்து எவ்வாறான அரசியலமைப்பைக் கொண்டது? 1 புள்ளி

______________________________________________

2. வையகமெங்கும் வாழும் தமிழரின் அடையாளங்கள் எவை? 1 புள்ளி

______________________________________________

______________________________________________

3. ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் திறை கொடுக்க மறுத்த தமிழ்மன்னன் யார்? 1 புள்ளி

______________________________________________

4. 'சொல்' என்பதை பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் எழுதுக. 1 புள்ளி

______________________________________________

______________________________________________

5. பாரதியாரால் புகழப்பெற்ற புலவர்கள் யாவர்? 1 புள்ளி

______________________________________________

6. தெரிநிலைவினை என்றால் என்ன? 1 புள்ளி

______________________________________________

______________________________________________

7. ஆகுபெயர் என்றால் என்ன? இது எத்தனை வகைப்படும்? சினையாகுபெயர், நீட்டலளவையாகுபெயர் என்பவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக. 2 புள்ளி

8. செய்வினை, செயப்பாட்டுவினை இரண்டையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2 புள்ளி

**5. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவுசெய்க.**

1. தொட்டனைத்து ஊறும் ______

2. சிறைகாக்கும் காப்பு ______

(2×1=2 புள்ளி)

**6. சிறுகுறிப்பு எழுதுக.**

1. சிலப்பதிகாரம்

2. தமிழர் புலப்பெயர்வு

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

(2×2=4 புள்ளி)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

படைப்புப் பல படைத்து பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறுநடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும்நாளே.

1. படைப்புப் பல படைத்து பலரோடு உண்பவர் யார்?

__________________________________________________

2. எதைச் சேர்த்து அடிசில் சமைக்கப்பட்டுள்ளது?

__________________________________________________

3. குழந்தைகள் செய்யும் செயல்கள் எவை எனக் கூறப்பெற்றுள்ளது?

__________________________________________________

4. குழந்தைகள் இல்லாதவர்களுடைய வாழ்நாள் எப்படியானது?

__________________________________________________

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

(5×1=5 புள்ளி)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. திருக்குறள்
2. வையகத்தமிழர்
3. சுவிஸ்நாட்டில் நடைபெற்ற முத்தமிழ்விழாபற்றி உமது பாட்டிக்குக் கடிதம்

(7 புள்ளி)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வள்ளல் பாரியின் அளவற்ற கொடைச்சிறப்பினால் அவனது புகழ் எங்கும் பரவியது. அதனையறிந்து பொறாமை கொண்ட சேர, சோழ, பாண்டியராகிய முடியுடை மூவேந்தரும் பாரிமன்னன் ஆண்ட பறம்புமலையை முற்றுகையிட்டனர். அப்போது பாரியின் நண்பரான கபிலர் என்னும் புலவர், மூவேந்தர்களிடஞ் சென்று அரசர்களே! உங்களுடைய முற்றுகையினால் என் நண்பன் அஞ்சவும்மாட்டான்; அடிபணியவும் மாட்டான். குடிகளின் அன்பே பாரி பெற்ற பெருஞ்செல்வமாகும். அக்குடிமக்கள் இறுதிவரையும் பாரிக்காகப் போர் புரிவர். பறம்பு மலையில் மூங்கில், நெல் விளைகின்றன. இனிய சுவையுடைய பலாக்கனிகள் நிறைய இருக்கின்றன. குடம் குடமாகத் தேனைச் சொரியும் தேனடைகள் அதிகம் உள்ளன. பாரியிடம் அன்பு பூண்டுள்ள பச்சைக்கிளிகள் நெற்கதிர்களை எடுத்துவருகின்றன. முற்றுகையிடுவதாற் பாரியைப் பணியவைக்கலாம் என்பது பகற்கனவாகும். ஆனால், தமிழ்ப்பாக்கள் பாடிக்கொண்டு சென்று பறம்புமலையைப் பரிசாகக் கேட்பீர்களானால் பாரி தயங்காமல் அப்பரிசைக் கொடுத்திடுவான் என்று கூறினார்.

1. பறம்புமலையை ஆண்ட மன்னன் யார்?

______________________________________________

2. அவன் புகழ் பரவக் காரணம் என்ன?

______________________________________________

3. அவன் மீது பொறாமை கொண்டவர்கள் யார்?

______________________________________________

4. பாரிமன்னனின் நண்பன் யார்?

______________________________________________

5. கபிலர் பாரியிடமுள்ள பெருஞ்செல்வம் எதுவெனக் கூறினார்?

______________________________________________

6. பறம்புமலையில் விளையும் பொருட்கள் எவை?

______________________________________________

7. பறம்புமலையை முற்றுகையிட வந்த மூவேந்தர்களுக்கும் பாரியின் நண்பன் கூறியது யாது?

______________________________________________



(7×1=7 புள்ளி)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மனிதனை விலங்குகளிலிருந்து பிரித்துக்காட்டும் பண்பு அவனுடைய சிந்திக்கும் ஆற்றலின்றி அவனுடைய மொழியாற்றலே என்னும் கருத்து இக்காலத்தில் வலுப்பெற்று வருகிறது. கருத்து வெளிப்பாட்டுக்கு அடிப்படையாக அமையும் மொழியாற்றல் மனிதனுக்குக் கிடைத்த மிகச்சிறந்த கொடையாகும். இந்த மொழியாற்றல் மூலமாக மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளை இசையூட்டிய சொற்களால் வெளிப்படுத்தும்போது அவை பாடல்களாகின்றன. இவ்வாறு தோன்றிய பாடல்கள் இலகுவான ஓசையமைப்பினை உடையனவாகவே அமைந்தன. பழங்கால மனிதர் தங்களுக்கேற்ற வகையில் இப்பாடல்களை அமைத்துக்கொண்ட போதிலும் அவை தற்கால இசைப்பாடல்கள் என்று கூறத்தக்க வகையில் எந்தவித விதிகளையும் பின்பற்றியனவாக அமையவில்லை. இவ்வாறு எளிமையும் பண்படாத் தன்மையுங் கொண்ட பாடல்களைப் பிற்காலத்திலே துறைசார்ந்த வல்லுநர் சிலர், பண்படுத்தி அவற்றுக்கு யாப்பமைதி, இசையமைதி ஆகியவற்றை இலக்கண வாயிலாகக் கூறமுற்பட்டபோது செம்மையான தற்கால இசை தோன்றியது எனலாம். ஆகவே கற்றவர்களால் பண்படுத்தப்பட்ட மக்கள் பாடல்கள் ஒருபுறமும் பெரும்பான்மை மக்களோடு பின்னிப்பிணைந்து பண்படுத்தப்படாதனவாகிய மக்கள் பாடல்கள் இன்னொரு புறமும் இருக்கின்றன. இவற்றுள் இரண்டாவது வகையினையே நாம் இன்று நாட்டுப்பாடல்கள் என்று கருதுகின்றோம்.

(4 புள்ளி)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத் தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியினைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

(4 புள்ளி)

**Deutsch**

**HSK-Unterricht: Ziele und Geschichte**

Im HSK-Unterricht werden zwei- oder mehrsprachig aufwachsenden Schülerinnen und Schülern Kompetenzen in ihrer Herkunftssprache vermittelt, die über den alltäglichen mündlichen Gebrauch hinausgehen.
Die Anfänge des HSK-Unterrichts gehen auf die 1930er-Jahre zurück, als politische Flüchtlinge aus Italien in den Schweizer Städten für ihre Kinder erste Kurse in italienischer Sprache organisierten. Mit der, Ende der 1940er-Jahre, erneut einsetzenden Arbeitsmigration aus Italien wurde das Bedürfnis nach diesem Angebot zunehmend grösser.

**Français**

**Enseignement LCO - Langue et culture d'origine : Objectifs poursuivis et bref historique**

L'enseignement LCO permet à des élèves grandissant dans un contexte bilingue ou multilingue d'acquérir, dans leur langue d'origine, des compétences qui vont au-delà de l'usage oral qu'ils font de leur langue au quotidien.
Les débuts de l'enseignement LCO remontent aux années 1930, lorsque des réfugiés politiques ayant quitté l'Italie pour s'établir dans des villes de Suisse organisèrent, pour leurs enfants, les premiers cours de langue italienne. Vers la fin des années 1940, avec l'arrivée d'une nouvelle vague de travailleurs migrants venus d'Italie, la nécessité d'une telle offre se fit sentir encore plus fortement.

**Italiano**

**LCO: Obiettivi e cenni storici**

Nei corsi LCO, agli allievi bilingui o plurilingui vengono insegnate competenze della loro lingua madre, che vanno al di là dell'uso quotidiano della lingua stessa.
Gli inizi dei corsi LCO risalgono agli anni '30 del Novecento, quando i rifugiati politici italiani organizzarono nelle città svizzere, i loro primi corsi di italiano per i loro bambini.
Alla fine degli anni '40 del Novecento, con la ripresa dell'emigrazione dall'Italia, per motivi lavorativi, la richiesta di questo tipo di corsi divenne sempre più ampia.

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |